செ.வெ.எண் : 124 நாள் : 14/09/2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 14.9.2011

மேட்டூர் அணையிலிருந்து புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்களின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடும்படி, திருச்சி, அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, **மேட்டூர் அணையிலிருந்து** புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்களின் பாசனத்திற்காக **16.9.2011** முதல் **137** நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருச்சி, அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் **42,736 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.